[5th August 1966

question is now being examined by the Government of India in consultation with the Union Public Service Commission. No decision has so far been communicated to this Government.

திரு. வை. சங்கரன் : அந்தக் காலத்திலேயே இதற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியில்லாவிட்டாலும்கூட நமது அரசாங்கம் இதை விரைவிலே கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்துவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கவேண்டும். இதில் தாமதம் இருக்கிறது என்று சொல்வதற்கு இடம் இல்லை.

நெல்லையில் அரசாங்கத் தமிழ்க் கல்லூரி

* 104 கேள்வி.—**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரையில் சர்வகலாசாலை வருவதையொட்டி மதுரை, இராமநாதபுரம், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களுக்கு நடு நாயகமாக விளங்கும் நெல்லையிலே அரசாங்கத் தமிழ்க் கல்லூரி ஒன்றும், தமிழ்ப் புலவர் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் வருகிற கல்வி ஆண்டிலிருந்து ஆரம்பிக்க, அரசினர் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal now.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த ராஜ்யம் முழுமையிலும் உள்ள தேவாலயங்கள், அறநிலையங்களினுடைய நிதி வசதி பெற்று ஏதாவது ஒரு பிரதான இடத்தில் திருநெல்வேலி அல்லது பெரிய தேவாலயங்களுக்குப் பக்கத்தில் ஒரு தமிழ்க் கல்லூரியை வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆலயங்களுக்குப் பக்கத்தில் சில கல்வி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்க் கல்லூரி அங்கு ஏன் இருக்கவேண்டும், அதன் லட்சியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. தமிழர்கள் எந்தெந்த வகையில் பயன் அடைய முடியுமோ, அந்த முறையிலே கல்வி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

Government Arts College, Ootacamund

* 105 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the construction work of the Biology Block in the Government Arts College, Ootacamund, has been suspended in view of the emergency?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No. The work in question was ordered to be suspended because the allotment made for the work for 1965–66 was fully utilised. Permission has since been accorded to proceed with the work.

5th August 1966]

திரு. ஜே. மாதா கவுடர் : அந்தக் கட்டடத்தை இந்த ஆண்டு முடிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. போதிய அளவு பணம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மறுபடியும் அந்த வேலை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று முன்பே கூறினேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அங்கு மூன்று கட்டடங்கள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டு ஒரு கட்டடம் கட்டப்பட்டு அதைக் கனம் முதலமைச்சர் அவர்கள் திறந்திருக்கிறார்கள். இரண்டாவது கட்டடமும் திறக்கப்படுவதற்குத் தயாராக இருக்கிறது. மூன்றாவது கட்டடத்தையும் நெருக்கடி நிலைமை என்று பாராமல் உடனடியாகக் கட்டி முடிக்க உத்தரவிடப்படுமா ? அங்கு 1,200 மாணவர்களுக்கு மேல் சேர்ந்திருக்கிற காரணத்தால் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. ஆகவே, இதையும் உடனடியாகக் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பண நெருக்கடி நிலையைப் பொருட்படுத்தாது கூடியவரையில் நிதி ஒதுக்கி கட்டடங்கள் கட்டப்பட்டுதான் வருகின்றன. முதலில் நீலகிரியில் அரசினர் கல்லூரி அமைக்கப்பட்டபோது நீலகிரி மக்கள் ஒரு தொகை நன்கொடை அளிப்பதாகச் சொன்னார்கள் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். ஆனால் அதிலே ஒரு சிறிய பகுதி தான் வந்திருக்கிறது. அரசாங்கம் பொதுவாக எல்லா இடங்களிலும் கல்லூரிகளை அமைப்பதற்கு நிதி உதவி செய்து வந்தாலும், மக்கள் என்ன உதவி செய்வதாகக் கூறினார்களோ அந்த அளவுக்காகிலும் நிதி உதவியைப் பெற்றுக் கொடுப்பதில் கனம் அங்கத்தினர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டால் நலம்.

Shift system in Colleges

* 106 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have proposed to introduce shift system in select colleges in each district of the State, for coping up with the applications for admission to P.U.C.?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

திரு. வை. சங்கரன் : ஷிப்ட் முறையை வைப்பதன் மூலமாக இருக்கின்ற கட்டடத்திலேயே அதிகப் பணச் செலவு இல்லாமல், கூடுதல் ஆசிரியர் தேவை இல்லாமல் நடத்தக்கூடிய அளவுக்கு அனுகூலமான திட்டமாக இருக்கும்போது அரசாங்கம் இதை வேண்டாமென்று கூறக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இருக்கின்ற கட்டடம் போதும் என்றாலும் இருக்கின்ற ஆசிரியர்களை வைத்தே இரண்டு ஷிப்ட் நடத்த முடியாது. பகல் காலத்தில் மாணவர்கள் வருவதிலேயே பல கோளாறுகள் இருக்கின்றன ; இரவில் வரச் சொன்னால் மேலும் சிரமந்தான். மேலும் தற்போது அவ்வளவு நெருக்கடியும் இல்லை. இந்த ஆண்டிலே புதிதாக 14 கல்லூரிகள் ஆரம்பிக்கப்